

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம், சுதந்திர தின விழாவை முன்னிட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசிய கொடி கம்பம் புதுப்பிக்கப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், முதன்மைத் தலைமைப் பொறியாளர்.சத்தியமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் திருமதி மேனகா, செயற்பொறியாளர் குழந்தையன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



சென்னை, ஓமந்துரார் தோட்டம், இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (02.08.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

# கல்வி நிகழ்ச்சிகளுக்கு கல்விச் சேனல்களில் முக்கியத்துவம் தரப்படுகிறதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 4 -

நமது நாட்டில் பிரசார் பாரதி, தனியார் ஸ்பான்சர் திட்டம் மற்றும் CSIR மற்றும் UGC ஆகியவை துணையுடன் கல்வி சேனல்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளுக்கு போதுமான முக்கியத்துவத்தை வழங்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்தும் நாட்டின் அனைத்து மொழி மக்களைச் சென்றடைய தமிழ் உட்பட அனைத்து பிராந்திய மொழிகளில் ஊக்குவிக்க / பிரசாரம் செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

பிரசார் பாரதி, தனியார் ஸ்பான்சர் திட்டம் மற்றும் CSIR மற்றும் UGC ஆகிய இரண்டின் தரமான கல்வி சேனல்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளுக்கு போதுமான முக்கியத்துவத்தையும் வழங்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

கடந்த எட்டு ஆண்டுகளில் கல்வி மற்றும் பாடத் திட்டங்களைத் தயாரித்து ஒளிபரப்புவதற்காக ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரம்?

நாட்டின் அனைத்து மொழிவாரிப் பகுதிகளிலிருந்தும் மக்களைச் சென்றடைய பல்வேறு பிராந்திய மொழிகளில் செய்யப்பட்ட கல்வித் திட்டங்களின் விவரங்கள்; மற்றும்

தமிழ் மொழியில் அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஊக்குவிக்க/பிரசாரம் செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்



கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் டாக்டர். சுபாஸ் சர்க்கார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

தற்போது, ஒன்றிய அரசின் கல்வித்துறையின் கீழ் 92 DTH சேனல்கள் பள்ளி மற்றும் உயர் கல்விக்கான ஆடியோ வீடியோ உள்ளடக்கத்தை வழங்குகின்றன, மேலும் PM eVidyaதிட்டத்தின் கீழ் DTH திறன் விரைவில் 280 சேனல்களாக விரிவுபடுத்தப்படும்.

குறிப்பாக கிராமப்புற, பழங்குடியினர் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் டிஜிட்டல் பிளவைக் கடக்கும் நோக்கத்துடன், கல்வி அமைச்சகம் DTH சேனல்கள் மூலம் உயர்தர கல்வித் திட்டங்களை வழங்குகிறது.

பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE), இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகம் (IGNOU), IIM பெங்களூர் மற்றும் IIT மெட்ராஸ் போன்ற பல்வேறு தேசிய ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் உயர்கல்வி மாணவர்களுக்கான ஆடியோ வீடியோ உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. ஆராய்ச்சி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து தரமான கல்வித் திட்டங்கள் பிரசார் பாரதியின் டிடி ஃப்ரீ டிஷின் அனைத்து பயனர்களும் இந்த சேனல்களை காண முடியும்.

தனியார் டிடிஎச் ஆபரேட்டர்கள் ஸ்வயம் பிரபா திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உயர்கல்வி உள்ளடக்கத்தை கூடுதல் செலவில்லாமல் ஒளிபரப்பலாம்.

உள்ளடக்க மேம்பாடு, தயாரிப்பு மற்றும் ஒளிபரப்பு போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட நிதி பின் வருமாறு:

2017-18ல் ரூ.63.4 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.63.4 கோடி வெளியிடப்பட்டது &பயன்படுத்தப்பட்டது

2018 - 19ல் ரூ.55.6 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.55.6 கோடி வெளியிடப்பட்டது &பயன்படுத்தப்பட்டது

2019 - 20ல் ரூ.52.0 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.28.0 கோடி வெளியிடப்பட்டது &பயன்படுத்தப்பட்டது

2020 - 21 ல் ரூ.26.9 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.26.9 கோடி வெளியிடப்பட்டது & பயன்படுத்தப்பட்டது

2021 - 2022ல் ரூ.29.2 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.29.2 கோடி வெளியிடப்பட்டது & பயன்படுத்தப்பட்டது

2022 - 2023ல் ரூ.251.2 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.251.2 கோடி வெளியிடப்பட்டது&பயன்படுத்தப்பட்டது. இது PM eVidyaகீழ் 12 பள்ளிக் கல்வி DTH சேனல்களை 200 ஆக விரிவுபடுத்துவதற்கான செலவையும் உள்ளடக்கியது.

ஆக இதுவரை மொத்தம் ரூ. 478.3 கோடி ஒதுக்கப்பட்டு ரூ. 454.3 கோடி வெளியிடப்பட்டது &பயன்படுத்தப்பட்டது.

நாட்டின் பல்வேறு மொழியியல் பகுதிகளைச் சேர்ந்த மக்களைச் சென்றடையும் நோக்கத்துடன், ஸ்வயம் பிரபாவின் தேசிய ஒருங்கிணைப்பாளராக இக்னோ, பல்வேறு படிப்புகளின் (வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல், பொருளாதாரம், உளவியல், பொது நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல்) நேரடி வகுப்புகளை நடத்துகிறது.

06 ஜனவரி 2022 முதல் இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒடியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு மற்றும் உருது ஆகிய 11 பிராந்திய மொழிகளில் ஸ்வயம் பிரபா பற்றிய அறிவியல். இன்று வரை 4500+ அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. பிராந்திய மொழிகளில் உள்ள அனைத்து வீடியோக்களும் ஸ்வயம் பிரபா காப்பகத்தில் கிடைக்கும். SWAYAM இன் 250 MOOC படிப்புகள் 111 பிராந்திய மொழிகளில் பரவலாகப் பரப்பப்பட்டுள்ளன.

தேசிய மொழி தொழில்நுட்ப இயக்கம் (டிஜிட்டல் இந்தியா பாஷினி), தமிழ் உட்பட திட்டமிடப்பட்ட இந்திய மொழிகள் அனைத்து 22 மொழிகளுக்கும் 3 ஆண்டு பணியாக பாஷினி இயங்குதளம் (https://bhashini.gov.in) மூலம் செயற்கை நுண்ணறிவு (AI) மூலமாக இயக்கப்படும் மொழி தொழில்நுட்ப தீர்வுகளை வழங்க தொடங்கப்பட்டது. இதன் வாயிலாக பொது நலன், குறிப்பாக, நிர்வாகம், கொள்கை மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றின் களங்களில் இணையத்தில் இந்திய மொழிகளில் உள்ளடக்கத்தை கணிசமாக அதிகரிப்பதை BHASHINI நோக்கமாகக் கொண்டுள்ளது.

AICTE ஆனது Al- அடிப்படையிலான மொழிபெயர்ப்பு கருவியான அனுவாதினியை உருவாக்கியுள்ளது, இது பொது இணைய தளங்கள், பாடப்புத்தகங்கள், கல்வி வீடியோக்கள் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குகிறது மற்றும் அனைத்து வகையான கல்வி ஆதாரங்களின் மொழிபெயர்ப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### உணவு பாதுகாப்பு தொடர்பாக

# நாடுமுழுவதும் 636 ஆலோசனை குழுக்கள்!

## தமிழச்சி தங்கபாண்டியனுக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக. 4 -

நாட்டில் உணவுப்பொருட்களில் கலப்படத்தை கண்டறிய ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உணவு பாதுகாப்புக்குழுவை அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?, கலப்படத்தை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்பது தொடர்பான கேள்விகளை தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் வைத்திருந்தார். இதற்கு மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பாரதி பிரவின் பவார் எழுத்துப் பூர்வமாக



பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

உணவு பாதுகாப்பு தொடர்பான விஷய ங்களில் உணவு பாது காப்பு ஆணையருக்கு உதவவும், ஆலோசனைகள் வழங்கவும் மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழுக்களை அமைக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் கடந்த 2018ம் ஆண்டு கடிதம் எழுதியது. இதன் அடிப்படையில் நாடு முழுவதும் மொத்தமுள்ள 729 மாவட்டங்களில் 636 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான ஆலோசனை குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம்2006 இன் விதிகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அமலாக்குதல் போன்றவை மாநில அரசுகளிடமே உள்ளது.

அதன்படி உணவு பாதுகாப்பு ஆணையர்கள் கலப்படத்தை தடுப்பதற்காக சோதனை நடத்தி, உணவு மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி கலப்படத்தை கண்டறிகிறார்கள்.

இதன்பேரில் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த வகையில் கடந்த ஆண்டு 4817 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர

# தெற்கு பகுதி வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) ஆய்வுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் -மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

குமரி, ஆக. 4 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி வாக்குச்சாவடி முகவர்களுக்கான (BLA 2) ஆய்வுக் கூட்டம் 02.08.2023, புதன் அன்று மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரி மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் த. ஜீவா தலைமையிலும், நாகர்கோவில் மாநகர செயலாளர் ப.ஆனந்த் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் கூட்டத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற வருகை பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது. வருகை தராத வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) அந்த பகுதி மற்றும் வட்டச் செயலாளர் மூலம் தகவல் தெரிவித்து ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி இராமநாதபுரத்தில் நடைபெறவிருக்கும் தென் மண்டலத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொள்ள செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. கூட்டத்தில் வட்டச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி வியாழக்கிழமை அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி முகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார்கள். எனவே குமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகிற 07.08.2023, திங்கட்கிழமை அன்று முத்தமிழறிஞர் கலைஞர் வடசேரி அண்ணா சிலையில் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இருந்து அமைதி ஊர்வலம் துவங்கி மணிமேடை சந்திப்பு, அரசமூடு சந்திப்பு வழியாக நாகர்கோவில், ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட உள்ளது. இதில் அனைத்து கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

**திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகரம், 17வது வார்டு செயலாளர் கே.முத்து மற்றும் 21வது வார்டைச் சேர்ந்த அ.அனஸ்மைதீன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல் பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி** (Suspension) **வைக்கப்படுகிறார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 02-08-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.


### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

தஞ்சை, ஆக. 4 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகின்ற 07.08.2023 திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் தாராசுரம் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலையிலிருந்து தாராசுரம் பைபாஸ் ரோடு கலைஞர் பொன் விழா நுழைவு வாயில் வரை கருப்பு சட்டை அணிந்து அமைதி பேரணியாகச் சென்று அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள் தவறாது குறித்த நேரத்தில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

(குறிப்பு : மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்களை திரளாக அழைத்து வர மாநகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்வதுடன் அனைத்து பகுதிகளிலும் திருவுருவ ப் படத்திற்கு அஞ்சலி செலுத்தவும் ஏற்பாடு செய்யவும்)



நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் மாட்டுச் சந்தையில் ரூபாய் 90 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாட்டு கொட்டகையை பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் திறந்து வைத்தார். உடன் துணை மேயர் ராஜ், மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா,மாமன்ற உறுப்பினர்கள் அலிஷேக் மன்சூர், ரசூல் மைதீன்,சபி அமீர்பாத்து,பொன் மாணிக்கம் ஜான்,மைதீன் அப்துல் காதர்,நித்திய பாளையா,சுந்தர், அம்பிகா, பகுதி செயலாளர் துபாய் சாகுல்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தினேஷ், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காசிமணி,பொறியாளர் அணி சாய்பாபா உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குமரி மணிமாறன்**
**ஆகஸ்ட் 4 (2021)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் பணியாற்றினார்.**

**முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரின் பணிகளை போற்றும் வகையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**